ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/04 - March 2023

# மலைபடுகடாமில் முல்லைத்திணை வாழ்வியல்

**கட்டுரையாளர்**
**முனைவர் க. மோகன்காந்தி,**
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை*
*தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*
*திருப்பத்தூர் – 635601*
*திருப்பத்தூர் மாவட்டம்.*

## முன்னுரை

தமிழகத்திலுள்ள ஐந்நிலக் கட்டமைப்பில் காடும் காடு சார்ந்த பகுதியை முல்லை நிலம் எனப் பழந்தமிழர் கட்டமைத்தனர். ஆநிரை மேய்த்தல், மேட்டு நில வேளாண்மை, பால் பொருள் விற்றல், ஏறுதழுவுதல் உள்ளிட்டப் பண்பாட்டு அடையாளங்கள் முல்லைத் திணைக்குரியவை. இயற்கை சார் வாழ்விடம் காடு என்பதால் இயற்கையோடு ஒன்றிய வாழ்வியலும் முல்லை நிலத்தின் தனித்துவமாகும். பொருளீட்ட வேற்று நாட்டிற்குச் செல்லுதல் மற்றும் போர்க் காரணமாகத் தலைவியைப் பிரிதலும் முல்லை நிலப் பண்பாடுகளில் ஒன்று. தலைவனின் பிரிவை ஆற்றியிருக்கும் தலைவியின் நிலைப்பாடே முல்லை நிலப் பூவான, முல்லை மலரின் குறியீடாகும். இங்குத் தூய்மையான வெண்ணிற முல்லை மலர், தலைவியின் கற்பொழுக்கத்திற்கு குறீயீடாய் நின்றது. இத்தகைய சிறப்புகளைக் கொண்ட முல்லை நிலப் பண்பாட்டு அடையாளங்களை மலைபடுகடாமை முன்வைத்து இவ்வாய்வுக் கட்டுரை ஆராய்கிறது.

## மலைபடுகடாம்

சங்க இலக்கிய நூல்களில் ஒன்று மலைபடுகடாம். இந்நூல் 583 அடிகளைக் கொண்டது. பழவிறன் மூதூரைத் (செங்கண்மா – செங்கம் இன்றைய திருவண்ணாமலை மாவட்டம்) தலைநகரமாகக் கொண்டு நன்னன் சேய் நன்னன் என்னும் குறுநிலத் தலைவன் நல்லாட்சிப் புரிந்ததை இந்நூல் எடுத்தோதுகிறது. இவன் வளம்மிக்க நவிரமலையைத் தன் மலையாகக் கொண்டவன். இம்மன்னனின் நாட்டுக் கட்டமைப்பியில் குறிஞ்சி, முல்லை, மருதம் என மூன்று நிலப்பரப்புகள் அடையாளப்பட்டுள்ளன. அவற்றில் முல்லை நிலம் சார்ந்த செய்திகள் இங்குப் பாடுபொருளாய் அமைகிறது.

**முல்லை நில வாழ்வியல்**

*மலைபடுகடாம் ஏறத்தாழ 400 அடிகள் வரை குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கிறது. நன்னன் சேய் நன்னன் என்னும் மன்னனிடம் பரிசில் பெறுவதற்காக அவன் தலைநகரான பழவிறன் மூதூர் (செங்கண்மா – செங்கம்)*
*நோக்கிப் பயணிக்கும் கூத்தரும் விறலியரும் குறிஞ்சி நிலத்தைக் கடந்து முல்லை நிலத்திற்குள் பயணிக்கின்றனர்.*

*முல்லை நில மக்களின் பண்பாட்டு வாழ்வியலை இப்பகுதி விவரிக்கிறது. முல்லை நிலக் காட்டுப் பகுதியை இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், பெரிய புலிக்கு அஞ்சியோடிய கலைமான் தன் பிணையை (பெண்மான்) எண்ணி அழைக்கும் கொடிய காடு என்கிறார். இக்காட்டில் மரையேறுகள் நிறைந்திருக்கும். இத்தகைய கொடிய காட்டின் வழியே வேடவரின் வில்லுக்கு அஞ்சியோடும் மரையேறு என்கிறார். இந்த மரையேற்றைச் செங்கண் மரையேறு என்கிறார் புலவர். சிவந்த கண்களையுடைய மரையேற்றில் உள்ள, செங்கண் என்ற சொல்லாட்சியே ''செங்கண்மா'' என்ற ஊர்ப்பெயர், விலங்கின் பெயரால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இக்காட்சிகள் ஒரு நில வரைப்படம் (Google Map) போல் கூத்தர்கள் சென்ற வழித்தடத்தை எடுத்துரைக்கிறது. இக் காட்சியினை,*

**"புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்**
**கலைநின்று விளிக்கும் கானம் ஊழிறந்து**
**சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை**
**தலையிறும்பு கதழும் நாறுகொடிப் புறவின் "** - **மலைபடு *404 – 407***

*என்னும் பாடலடிகள் முல்லைக் காட்டின் நுழைவுப் பகுதிலேயே புலி, மான்கள், மரையேறுகள் மற்றும் அடர்ந்த வாசம் மிகுந்த காட்டு மரங்கள் என முல்லை நில நுழைவுப் பகுதியை முன்மொழிகின்றன.*

**கூத்தரும் முல்லை நில விருந்தோம்பலும்**

*செழிப்பு மிக்க முல்லை நில ஊர்களில் கூத்தர்கள் நுழைந்தவுடன், வளம் மிக்க முல்லை நில மக்களின் விருந்தோம்பல் சிறப்பினை புலவர் விவரிக்கிறார்.*

*ஆநிரை காவல் புரியும் கோவலர் உடைய வளையணிந்த மகளிர், கூத்தர்களே நீங்கள் மனம் மகிழும்படி சங்கு போன்ற வெள்ளிய நிறம் கொண்ட பசுவின் பாலை உங்களுக்கு உணவாக அருந்தத் தருவார். இதனால் உங்களுக்கு பயணித்த வருத்தம் மறைந்து புத்துணர்ச்சி ஏற்படும் என்கிறார். இதனை,*

**"வேறு புலம் படர்ந்த ஏறுடை இனத்த**
**வளையான் தீம்பால் மிளைசூழ் கோவலர்**
**வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின்**
**பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்த நும்**
**புலம்புசேண் அகலப் புதுவிர் ஆகுவிர்"** **மலைபடு *408 - 412***

*என்னும் இப்பாடலடிகள் மூலம் முல்லை நிலக் கோவலரினப் பெண்கள் சிறந்த பசும்பாலை தந்து விருந்தினரை உபசரிப்பதை அறியலாம். மேலும் ''மிளைச்சூழ்*

கோவலர்" என 409 வது வரி கூறுவது நோக்கத்தக்கது. 'மிளை' என்பது காவல் காட்டைக் குறிக்கிறது. முல்லை நிலக் கோவலர் ஆநிரைக் காவல் மட்டுமின்றி, நாட்டுக் காவலிலும் ஈடுபட்டிருந்தனர் என்பது இதனால் அறிய முடிகிறது.

சங்க இலக்கிய முல்லை நிலப் பாடல்கள், தலைவன் போர்க் காரணமாகப் பிரிவதைக் காணும் போது, இங்கு இடம் பெறும் நாட்டு எல்லைப் பாதுகாவலிலும் முல்லை நிலக் கோவலர் ஈடுபட்டதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இதை குறிஞ்சி (வெட்சி) முல்லை (கரந்தை) போரின் தொடக்கப் புள்ளியாகவும் பார்க்கலாம்.

மேலும் 'வளையான்' (மலைபடு 409) என்ற சொல்லாட்சியும் குறிப்பிடத்தக்கது. வளைந்த சங்கினைப் போன்ற பசு என்ற பொருளில் இங்கு இடம் பெற்றுள்ளது. செங்கத்திற்கு மேற்கே ஜவ்வாது மலையின் அடிவார ஊர்களில் ஒன்று வளையாம்பட்டு வளை + ஆன் + பட்டு வெண்மை நிறம் பொருந்திய மாடுகள் நிறைந்த ஊர் என்ற பொருளில் கொண்டால் மலைபடுகடாம் உரைக்கும் முல்லை நிலக் கோவலர் ஊர் இதுவென்று துணியலாம்.

**கோவலர் தொழில்கள்**

பண்டம் விற்போர் பண்டமாற்றமாகப் பெற்ற கலவை நெல்லின் பல நிற அரிசிகளைப் போன்று, பல நிறம் கொண்ட செம்மறியாட்டோடு வெள்ளாடு கலந்து நிற்கும், ஆடுகள் நிறைந்த முல்லை நில ஊர்களில் இரவுப் பொழுதை கழியுங்கள் என்று கூத்தர்களை அறிவுறுத்துகிறார் புலவர். இந்த ஆடுகளின் ஓசை கடல் போல ஒலிக்கும் தன்மை கொண்டது என்கிறார் புலவர் இதனை,

**" பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன**
**தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்**
**கல்லென் கடத்திடைக் கடலின் இரைக்கும்**
**பல்யாட் டினநிரை எல்லினிர் புகினே"** - ***மலைபடு 413 -416***

என்னும் பாடலடிகள் கோவலர் இன மக்களின் பண்டமாற்றுத் தொழிலின் போது பலவகைப்பட்ட அரிசி வகைகளுக்கு அவர்களின் பால்படு பொருட்களை விற்று அரிசி பெறுவதை வெளிப்படுத்துகிறது.

**" பறியுடைக் கையர் மறியினத்து ஒழியப்**
**பாலொடு வந்து கூழொடு பெயரும்**
**ஆடுடை இடை மகன்"** - ***குறுந் 221 : 2 – 4***

என்னும் குறுந்தொகை பாடலொன்று முல்லை நில ஆயர்கள் பால் பொருளைக் கொடுத்துவிட்டுப், பால் சோற்றைப் பெற்றுச் செல்வதை வலியுறுத்துகிறது.

நன்னன் சேய் நன்னன் நாட்டில் வாழும் கோவலரின மக்கள் கடலென என்று வியக்கும் வண்ணம் வெள்ளாடு, செம்மறியாட்டு இனங்களை வளர்த்துள்ளனர். இந்நிகழ்வு முல்லை நிலக் கோவலர் இன மக்களின் செல்வம் மிக்க வாழ்வியலை வெளிப்படுத்துகிறது.

கடல் போல் மிகுந்திருக்கும் ஆடுகளின் தேவைக்கான மேய்ச்சல் நிலம் இப்பகுதியில் இருக்கிறதா? என்ற எண்ணம் நமக்குள் எழுகிறது.

கடல் போல் ஆடுகளை நன்னன் சேய் நன்னன் நாட்டு மக்கள் வளர்த்தனர். இன்றைக்கும் நவிரமலை என்று சொல்லப்படக்கூடிய சவ்வாது மலை அடிவாரமான சிங்காரப்பேட்டை, மேல்செங்கம், தீத்தாண்டாப்பட்டு, வலசை, வளையாம்பட்டு, பரமனந்தல், ஊர்க் கவுண்டனூர், பண்ரேவ், மூலைக்காடு, காஞ்சி, கடலாடி உள்ளிட்ட பகுதிகள் பல குறுங்காடுகளைக் கொண்டு ஆநிரைகள் வளர்ப்பிற்கு ஏற்ற இடங்களாக இன்றும் விளங்குகின்றன. இக்கருத்திற்கு வலு சேர்க்கும் வண்ணம் செங்கண்மா வரலாற்று ஆய்வு நடுவத்தின் தலைவர் பிரேம் ஆனந்த் அவர்களின் தகவல் குறிப்பிடத்தக்கது.

“தென் தமிழகப் பகுதிகளில் இருந்து இன்றைக்கும் இலட்சக்கணக்கான ஆடுகள் செங்கம் பகுதியிலுள்ள மேட்டு நிலக் காட்டுப் பகுதிகளுக்கு மேய்ச்சலுக்காகக் கொண்டு வரப்படுகின்றன. இராமநாதபுரம், புதுக்கோட்டை பகுதிகளில் இருந்து இந்த ஆடுகள் கொண்டுவரப்படுகின்றன. சிதம்பரம், கடலூர், கள்ளக்குறிச்சி, தண்டராம்பட்டு, தாழையூத்து ,ஆண்டிப்பட்டி, மேல் செங்கம், செங்கம் என ஆடுகளை ஆடு மேய்ப்பவர்கள் அழைத்து வருகின்றனர். ஆடி மாதத்தில் மேய்ச்சலுக்கு வரும் ஆடுகளை தை மாதம் வரை மேய்த்து விட்டுப் பின்னர் தங்கள் ஊருக்கு ஆடு மேய்ப்பவர்கள் ஓட்டிச் செல்கின்றனர்” என்று பிரேம் ஆனந்த் கூறுவது நோக்கத்தக்கது.

கடல் போல் ஒலிக்கும் ஆடுகள் என்று மலைபடுகடாம் கூறுவதை இன்று இலட்சக்கணக்கு என எண்ணிக்கையில் கூறுவதும் சங்க கால நீட்சியின் வெளிப்பாடு என்பதை அறியலாம்.

**கோவலர் தந்த தோற் படுக்கை**

கூத்தர்கள் கோவலர் குடியிருப்புகளை மாலை நேரத்தில் சென்றடைந்துள்ளனர். மாலை நேரத்தில் பயணிப்பது மிகவும் ஆபத்தை விளைவிக்கும் என்பதால், முல்லை நிலக் கோவலர் இன மக்கள் மிகுந்த பண்பாட்டோடு கூத்தர்களைத் தங்கள் இல்லத்திலேயே தங்க வைக்கின்றனர்.

மலை அடி ஊர் என்பதால் இரவு நேரத்தில் எப்பொழுதும் குளிர் மிகுதியாக இருக்கும். கூத்தர்கள் தங்கக் கூடிய, ஒரு இரவு பொழுது கூட குளிரால் நடுங்காமல் பாதுகாப்போடு உறங்கிச் செல்ல வேண்டும் என்ற வேட்கையோடு, உண்ண பாற்சோறையும் பாலையும் பருகத் தருவர். மேலும் நீங்கள் உறங்குவதற்கு ஏற்ற ஆட்டின் தோலாற் செய்யப்பட்ட, தோற்படுக்கையை உங்களுக்கு வழங்குவர். கொடிய விலங்குகள் குடிசைகளை நெருங்காமல் இருக்க தீமூட்டி உங்களை பாதுகாப்பர் என்று இடையின மக்களின் ஒப்பற்ற விருந்தோம்பல் உபசரிப்பை மலைபடுகடாம் வெளிப்படுத்துவதை,

**“ பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்**
**துய்ம்மயிர் அடக்கிய சேக்கை யன்ன**
**மெய்யுரித் தியற்றிய மிதிய தட் பள்ளி த்**
**தீத்துணை யாகச் சேந்த னிர் கழிமின்”** ***மலைபடு 417 - 420***

என்னும் பாடலடிகள் தெளிவாக விளக்குகின்றன.

**முடிவுரை**

*மலைபடுகடாம் முல்லை நில மக்கள் ஆநிரையோடு கொண்ட தொடர்பை விரிவாக எடுத்துரைக்கிறது. இடையர்களின் உணவு பாலும் பாற்சோறுமே ஆகும். ஆடுகளை மந்தை மந்தையாக வளர்த்துள்ளனர். அவை மாலை நேரத்தில் கத்தும் ஒலி கடலொலி போல் இருந்தது என்கிறார் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார். இதன்மூலம் பெருந்திரள் கொண்ட வெள்ளாடும், செம்மறியாடும் செங்கம் பகுதியில் வளர்க்கப்பட்டதை அறிய முடிகிறது. விருந்தினராக வந்த கூத்தர்களுக்கு ஆடுகளின் தோல்களை வாராகத் தைத்து, தோற்படுக்குகளைத் தயாரித்துள்ளனர். இம்மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைத் தாங்களே தயாரித்துக் கொள்ளும் தற்சார்புடைய மக்களாக அறியப்படுகிறார்கள். மேலும் வணிகத்தின் தொடக்கப் புள்ளியான பண்டமாற்று முறையையும் முல்லை நில மக்கள் செய்துள்ளனர் என்பது சிறப்புக்குரியதாகும்.*

**ஆய்வுக்கு துணை நின்ற நூல்கள்**


1. *சோமசுந்தரனார் பொ.வே, குறுந்தொகை, கழக வெளியீடு, சென்னை மறு அச்சு 2017*
2. *சோமசுந்தரனார் பொ. வே, பத்துப்பாட்டு, கழக வெளியீடு, சென்னை பதிப்பாண்டு 2017*


**தகவலாளர்**

1. *பிரேம் ஆனந்த் (வயது 45) தலைவர், செங்கண்மா வரலாற்று ஆய்வு நடுவம், செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்.*